**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 16** **நாள்: 09.01.2026**

## பெருநகர சென்னை மாநகராட்சியின் ₹205.59 கோடி மதிப்புள்ள பசுமை நகராட்சி நிதிப்பத்திரம் (Green Municipal Bond) வாயிலாக தேசிய பங்குச் சந்தை (NSE)யில் நிதி திரட்டியுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி தனது முதல் பசுமை நகராட்சி நிதிப் பத்திரம் (Green Municipal Bond) மூலம் ₹205.59 **கோடியினை தேசிய பங்குச் சந்தை (NSE)யின் வாயிலாக** வெற்றிகரமாக நிதி திரட்டியுள்ளது. இந்த நிதிப் பத்திரம் 2026 **ஜனவரி 12 அன்று தேசிய பங்குச் சந்தை (NSE)யில்** பட்டியலிடப்பட உள்ளது. இது, பெருநகர சென்னை மாநகராட்சியின், நிலையான நகர்ப்புற வளர்ச்சி மற்றும் பருவநிலை மாற்றத்திற்கேற்ற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்களை திரட்டும் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துகிறது. இது நடப்பு நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியின் **இரண்டாவது நகராட்சி நிதிப் பத்திர வெளியீடு** ஆகும். அதே நேரத்தில், **முதல் பசுமை நிதிப் பத்திரம்** என்பதும் குறிப்பிடத்தக்கது. புதுமையான மற்றும் நவீன நிதி திரட்டும் முன்னெடுப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொண்டு வருவதை இது வெளிப்படுத்துகிறது.

இந்த **பசுமை நகராட்சி நிதிப் பத்திரம்** (Green Municipal Bond) மூலம் திரட்டப்பட்ட நிதி, பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொண்டு வரும் முக்கிய சுற்றுச்சூழல் உட்கட்டமைப்பு திட்டமான **கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் (Dumping Ground) பயோ மைனிங் (Bio-mining) மற்றும் மீட்டுருவாக்கம் (Remediation) பணிகளுக்காக** பயன்படுத்தப்படும். இந்த திட்டம், மொத்தம் 342.91 **ஏக்கர்** பரப்பளவு கொண்ட இடத்தில் இருந்து சுமார் 252 **ஏக்கர்** பரப்பளவை உள்ளடக்கியதாகும். பல ஆண்டுகளாக சேர்க்கப்பட்ட பழைய திடக்கழிவுகளை அறிவியல் முறையில் அகற்றுவதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த திட்டத்தின் மொத்த செலவு **₹648.38 கோடி** ஆகும். இதில் **பெருநகர சென்னை மாநகராட்சியின் பங்குத் தொகை ₹385.64 கோடி** ஆகும். மாநகராட்சியின் இந்த பங்குத் தொகையிலிருந்து **₹205.59 கோடி** தொகைக்கு

**பசுமை நகராட்சி நிதிப் பத்திரங்கள் மூலம்** பெருநகர சென்னை மாநகராட்சி 10 ஆண்டு காலத்திற்கு, ஆண்டுக்கு 7.95% என்ற மிகவும் குறைந்த வட்டி விகிதத்தில் நகர்ப்புர நிதிப் பத்திரங்களை வெற்றிகரமாக திரட்டியது.

இந்த வெளியீட்டுக்கு முதலீட்டாளர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு கிடைத்துள்ளது. அதன்படி ₹100.03 கோடி ரூபாய் அடிப்படை வெளியீட்டுத் தொகையை விட 5.02 மடங்கு அதிகமாக, அதாவது **₹501.90 கோடி** ரூபாய் மதிப்பிலான ஏலங்கள் தேசிய பங்குச் சந்தையின் மின்னணு ஏலம் மூலம் பெறப்பட்டன. இது பெருநகர சென்னை மாநகராட்சியின் வலுவான நிதி மேலாண்மை மற்றும் திட்டத்தின் கட்டமைப்பிற்கு முதலீட்டாளர்கள் மத்தியில் உள்ள வலுவான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் பசுமை நகர்ப்புர நிதிப் பத்திரங்களுக்கு கேர் ரேட்டிங்ஸ் மற்றும் அக்யூட் ரேட்டிங்ஸ் ஆகிய இரு நிறுவனங்களும் 'AA+' என தரமதிப்பீடு செய்துள்ளன. இது பெருநகர சென்னை மாநகராட்சியின் சீரிய நிதி மேலாண்மையை எடுத்துக்காட்டுகிறது.

மேலும், ஒன்றிய அரசின் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் நகர்ப்புர பசுமை நிதிப் பத்திர வெளியீட்டு ஊக்கத்தொகையாக மாநகராட்சிக்கு 20 கோடி ரூபாய் ஊக்கத்தொகையும் பெறப்படும். இது நகர்ப்புர பசுமை நிதிப் பத்திரங்கள் மூலம் நிதியினைத் திரட்டும் செலவினை மேலும் குறைத்திட உதவும்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**

**GREATER CHENNAI CORPORATION**
**PRESS RELEASE**

**P.R.No. 16** **Date : 09.01.2026**

# Issuance of Greater Chennai Corporation's ₹205.59 Crore Green Municipal Bond on National Stock Exchange (NSE)

The Greater Chennai Corporation (GCC) has successfully raised₹205.59 Cr through its first Green Municipal Bond which will be listed on National Stock Exchange, on 12th January 2026 further strengthening its commitment to sustainable urban development and climate-responsive infrastructure financing. This marks GCC's second municipal bond issuance in this financial year and its first green bond, reflecting the Corporation's growing leadership in adopting innovative and responsible financing instruments.

The funds raised through the green bond will be utilised for the bio-mining and remediation of the Kodungaiyur Dumping Ground, a key environmental infrastructure project undertaken by GCC. The project covers approximately 252 acres of the total 342.91acre site and involves the scientific processing and removal of legacy municipal solid waste accumulated over several years. The total project cost is ₹648.38Cr, of which the Greater Chennai Corporation's share is ₹385.64 Cr. Out of GCC's own share, ₹205.59 Cr is raised through Green municipal bonds.

The issue witnessed an overwhelming response from the investor community, with the base issue of ₹100.03 crore being oversubscribed by 5.02 times. Bids worth₹ 501.9 Cr were received through the Electronic Bidding Platform of the National Stock Exchange (NSE), reflecting strong investor confidence in GCC's financial credentials and project structuring. The bond is raised for a tenure of 10 years at a highly competitive coupon rate of 7.95% p.a,

The GCC green bond has been rated 'AA+' by CARE Ratings and Acuite Ratings, reflecting GCC's strong financial position, sound governance framework, and structured debt servicing mechanism.

As a first-time issuer of a Green Municipal Bond, GCC is eligible for an incentive of ₹10 crore for every ₹100 crore raised, subject to a maximum of ₹20 crore, from the Union Government under the AMRUT 2.0 scheme, effectively reducing the cost of borrowing and making the issuance even more financially prudent.

**Issued : Joint Director/Public Relations Officer,**
**Greater Chennai Corporation.**